இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் : 02/2019

எனது இலக்கம் :PA/CS/POLICY/ පොදු
அரசாங்க நிர்வாக மற்றும் அனரத்த
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.04.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆந் தரத்துடைய அலுவலர்களின் வினைத்திறன் காண் தடையினை பூர்த்தி செய்திராமையின் அடிப்படையில் சம்பள ஏற்றத்தினை ஒத்திவைத்தல் தொடர்பாக**

இலக்கம் 1840/34 இனையுடைய 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணத்துக்கு ஏற்ப அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் அச் சேவையின் I ஆந் தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் ஐந்து (05) வருடங்களினுள் அச் சேவைக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

02. எனினும், இதுவரை I ஆந் தரத்தில் ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியடைந்திருந்தும் I ஆந் தரத்துக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை முழுமைப்படுத்த முடியாத காரணத்தினால் சம்பள ஏற்றத்தினை இழந்துள்ள அலுவலர்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் இலக்கம் : PSC/APP/4/62/2018 மற்றும் 2019.03.19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

I. 2021.01.01 ஆந் திகதி வரை வினைத்திறன் காண் தடைப் பரீட்சை அல்லது பயிற்சிப் பாடநெறியை முழுமைப்படுத்துவதற்கான சலுகைக் காலத்தினை வழங்குதல்.
II. மேற்படி கால எல்லையின் முடிவில் சித்தியடையாத அலுவலர்களுக்கான சம்பள ஏற்றங்களை நிறுத்துதல்.

ஒப்பம்./ கே.வீ.பி.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்